இளங்காடு ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை :முனைவர் S. விஜயன்
கடித எண். 10/2023, நாள். 07.12.2023

பொருள்:- மனைப்பிரிவு விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் இளங்காடு ஊராட்சிக்குட்பட்ட இளங்காடு கிராமம் சர்வே எண். 89, 90/7 -ல் அமைந்துள்ள 2.41 ஏக்கருக்கான 9750 ச.மீ. பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் சார்பு.

பார்வை:- 1. அரசானை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை UD (3) நாள். 28.09.2020.

2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் மாவட்டம் அவர்களின் கோப்பு எண். 12776/2023 / TCP நாள். 16.10.2023

3. இளங்காடு ஊராட்சி தீர்மான எண். 10/2023 நாள். 07.12.2023

4. தானப் பத்திர ஆவண எண். 2407/2023 நாள் 23.08.2023.

5. திருமதி. J. தீபா, B. உஷா அவர்களால் 06.12.2023 அன்று நிலமாற்று நிலமதிப்பு கட்டணம் இந்தியன் வங்கியில் செலுத்திய சலான்.

உத்திரவு

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் இளங்காடு ஊராட்சிக்குட்பட்ட இளங்காடு கிராமம் சர்வே எண். 89,90/7 - ல் 2.41 ஏக்கருக்கான 9750 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தினை மனைப்பிரிவாக வரன்முறைப்படுத்திட பார்வை 1 - ல் காணும் அரசாணையில் கண்டுள்ள வழிகாட்டும் நெறிமுறைகளைப் பின்பற்றியும்.

பார்வை 2 - ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் அவர்களின் நிபந்தனைகளை பின்பற்றியும்

பார்வை 3 - ல் காணும் இளங்காடு ஊராட்சியின் தீர்மானத்தினைப் பின்பற்றியும்

பார்வை 4 - ல் காணும் தானப் பத்திரத்தில் கண்டுள்ள நிலத்தினை தல ஆய்வு செய்தும்.

பார்வை 2 - ல் கண்டுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றியும் கீழே கண்டுள்ள விபரப்படி

வ.எண்.	பரப்பளவு	சந்தை மதிப்பு	3 சதவீத நிலமாற்று நில மதிப்பு கட்டணம்
1.	ஏக்கர் 2.41 க்கு 9750 ச.மீ	1 ஏக்கர் ரூ. 5,50,000/- 2.41 ஏக்கருக்கு ரூ. 13,25,500/-	ரூ. 39,765/-

நிலமாற்று நிலமதிப்பு கட்டணமாக திருமதி. J . தீபா திருமதி. B. உஷா அவர்களால் பார்வை 5 – ல் கண்டுள்ளவாறு வங்கியில் கட்டப்பட்டுள்ள தொகை ரூ. 39,765/– சலானை ஆய்வு செய்தும் மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் கீழே கண்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றி வழங்கலாகிறது.

நிபந்தனைகள்

1. நில உரிமம் பத்திரம் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் மனைப்பிரிவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆவணங்கள் தவறானவை என அறியப்பட்டால் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும்.
2. மனைப்பிரிவில் பதிய கட்டிடங்கள் அமைக்கும் போது ஒவ்வொரு கட்டிடத்துக்கு தனித்தனியாக முன் அனுமதி பெறவேண்டும்.
3. மனைப்பிரிவுக்கான இடம் அரசு நிலமாகவோ அல்லது நீர் நிலைக்கட்குண்டான இடமாகவோ இருப்பது தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி மனைப்பிரிவுக்கான அனுமதி ரத்து செய்யப்படும்.
4. மேற்படி மனைப்பிரிவுக்கு இளங்காடு ஊராட்சியில் அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், இட உரிமை தொடர்பாக ஏதேனும் வில்லங்கம் இருப்பின் பத்திர பதிவுத்துறை பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் இளங்காடு கிராமமம் மனைப்பிரிவு சர்வே எண். 89,90/7 – ல் அமைந்துள்ள 2.41 ஏக்கருக்குண்டான 9750 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள 58 மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடலாகிறது.

இடம் : இளங்காடு
நாள் : 07.12.2023

தலைவர்

PRESIDENT
Elangadu Panchayat
Koliyanur Union

பெறுதல்

திருமதி. J . தீபா ,
திருமதி. B. உஷா,
304, மேற்கு பாண்டி ரோடு,
வளவனூர் & அஞ்சல்,
விழுப்புரம் மாவட்டம் & வட்டம்.

நகல் 1 உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.

நகல் 2 உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு) விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.

நகல் 3 சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலம், வளவனூர் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் 4 வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.

வைப்பு நிதி செலுத்தும் சீட்டு / DEPOSIT / PAY IN SLIP

இண்டியன் வங்கி Indian Bank

கிளை / Branch VALAVANUR

தேதி Date 0 6 1 2 2 0 2 3

சேமிப்பு/நடப்பு/ஓ.டி./சி.சி./தொ.க./கால்கடன்/டி.எல்./கடன் அட்டை எண்
SB/CA/OD/CC/RD/TU/DL A/c No./Credit Card No.

7	3	9	2	9	8	4	8	1	

பெயர் /Name ELANGADU VP 233193

தொலைபேசிஎண் /Tel.No. 9901237716

	ரூ/₹	பை /P.
ரொக்கம் Amount	39765	

ரூபாய் எழுத்தால் / Rupees in words Thirty one Thousand Seven Hundred and Sixty Five

ரொக்கம்/காசோலை/தேதி/வங்கியின் பெயர்/கிளை Cash/Cheque No./Date&Name of Bank & Branch	ரூ./₹	பை/P.
மொத்தம் / Total	40,000	—

அதிகாரி/காசாளர்/ஒ.சா.பா.
Officer/Cashier/SWO

இந்தியன் வங்கி இலவச தொலைபேசி எண்/ Indian Bank Toll Free
1800425 00 000

28.08.2023

திருவி
S.விஜயன்
ஊராட்சி மன்ற தலைவர்,
இளங்காடு ஊராட்சி,

கோபிசெட்டிபாளையம் ஒன்றியம்
ஈரோடு மாவட்டம்.

பெறுதல்
உதவி இயக்குனர் அவர்கள்,
நகர் ஊரமைப்பு இயக்குனர் அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

ஐயா,

பொருள்: ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் ஒன்றியம் - இளங்காடு ஊராட்சி - இளங்காடு கிராம புதிய மனைப்பிரிவு - வரைபடத்தில் கண்டுள்ளபடி தார் சாலைப்பகுதியை பத்திரம் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகல் சான்று கோரி.

பார்வை: ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களின் கடிதம் எண் 12776/2022/TCP நாள் 07.06.2023 8:09 PM.

-o-

பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் கண்டுள்ளபடி மனைக்கான பத்திர பதிவு அலுவலகத்தில் ஆவண எண் 2407/2023 நாள் 23.08.2023 அன்று தார் சாலைப்பகுதியை பத்திரம் இலவச பட்டாவுக்கு அளித்துள்ள நான்கு சாலையின் பரப்பு 2142.35 ச.மீ மற்றும் வரி இனமாக பயன்பாட்டிற்கு பட்டாவுக்கு அளித்துள்ளது 60.82 ச.மீ மின்சாரத்துறை பயன்பாட்டுக்காக அளித்துள்ளது 61.34 ச.மீ

ஆகையால் (1) பு. உதவி (2) பஞ. தியன் என்பவர்களால் இளங்காடு ஊராட்சிக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த சாலை பத்திரம் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகல் கடிதத்தினை பணிவுடன் சமர்ப்பித்துள்ளோம் என்பதை கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

இளங்காடு
28.08.2023

S.விஜயன்
ஊராட்சி மன்ற தலைவர்
இளங்காடு ஊராட்சி,
கோபிசெட்டிபாளையம் ஒன்றியம்